வானவில்
VAANAVIL
ISSUE – 25 JANUARY 2013
இதழ் - 25 தை 2013


# இலங்கையின் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும்!

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு சம்பந்தமாக அண்மையில் சில முக்கியமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிரதானமாக ஆளும் தரப்பு முக்கியஸ்தர்களாலேயே அக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேளை, அதற்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்வதில்லை என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்திருந்தது. அக்கட்சி சார்பாக தமது நிலைப்பாட்டை விளக்கி நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிட்ட கட்சியின் பொதுச்செயலாளரும், சிரேஸ்ட அமைச்சருமான டியூ குணசேகர, தற்போதைய அரசியல் அமைப்பிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அது மாற்றப்பட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி அறிக்கையொன்றை விடுத்திருந்தார்.

அவர் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் சம்பந்தமான பிரச்சினையில் கருத்து வெளியிட்ட காரணத்தால், பிரதானமாக நிறைவேற்று அதிகாரத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும், நீதி பரிபாலனத் துறைக்கும் இடையிலான முரண்பாட்டையே சுட்டிக்காட்டினார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது என்னவோ உண்மை என்றபோதிலும், அதுபற்றி சபாநாயகர் சமால் ராஜபக்ச (ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உடன் பிறந்த சகோதரர்) பின்னர் கருத்துத் தெரிவிக்கையில், தான் இந்தப் பிரேரணை சம்பந்தமான விவாதங்கள், தீர்மானங்களின் போது பெரும் மன அழுத்தத்துக்கு உள்ளானதாகக் குறிப்பிட்டார். ஏனெனில் இந்தப் பிரேரணை




முன்வைக்கப்பட்ட பின்னர்தான், அரசு இயந்திரத்தின் முக்கியமான துறைகளுக்குள் உள்ள முரண்பாடுகள் தெரிய வந்ததாக அவர் குறிப்பிட்டார். அவரும் தற்போதைய அரசியல் அமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இந்த இருவருடைய கருத்துக்களும் தற்பொழுதைய சூழ்நிலையில், நடைமுறை சார்ந்த ஒரு விடயம் பற்றித் தீர்மானிக்க வேண்டிய நிலையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் எனக் கொள்ளலாம். ஆனால் இந்த அரசியல் அமைப்பை 1978ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த போதே,

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# இரண்டு ஆண்டுகளை கடந்து வெளிவரும் வானவில்

கடந்த இரண்டு ஆண்டுகளில் 24 வானவில் இதழ்கள் வெளிவந்துள்ளன. தை மாதம் வெளிவரவேண்டிய இந்த 25வது இதழ் சற்றுப்பிந்தி உங்கள் கைகளில் தவழ்ந்தாலும், வானவில்லினை தொடர்ந்து வெளிக்கொணர முடிவதையிட்டு நாங்கள் பெருமைப்படுகிறோம். பலவர்ணக் கலர்களில் விளம்பரம் முக்கால்வாசி ஜனரஞ்சக உள்ளடக்கம் கால்வாசியாக வெளியாகும் வணிக நோக்கிலான பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களுக்கு நடுவே, கறுப்பு வெள்ளையில் மக்களுக்கு நல்ல கருத்துக்களை கொண்டு செல்ல வேண்டும் என்ற ஒரேயாரு நோக்கில் வானவில் தனது பணியை செய்து வருகின்றது.

வானவில் ரொரண்ரோவில் (கனடா) ஓர் அச்சு பத்திரிகையாக வெளிவருகின்றது. இதனை எமது ரொரண்ரோவிலுள்ள தோழர்கள் விநியோகித்து வருகிறார்கள். அது தவிர மின்னஞ்சல் மூலமாகவும் வானவில் பலருக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு இதழ் வெளியான பின்னரும் நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் மற்றும் மின்னஞ்சல் ஊடாகவும் வாசகர்களிடமிருந்து வானவில்லிற்கு விமர்சனங்களும் பாராட்டுகளும் வருகின்றன. இந்த மாதிரியாக வானவில் இதழினை தொடர்ந்து ஊக்குவிப்பர்களுக்கு நாம் நன்றியை தெரிவிப்பதோடு, மேலும் உங்கள் ஆதரவினை வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் தேசிய வாதத்திற்கு எதிரான வானவில்லின் நிலைப்பாட்டால், ஒரு சிலர் வானவில் தமிழர்களுக்கு எதிரானதாக கருதுகிறார்கள். புலிகள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை விமர்சித்து வானவில்லில் எழுதப்படும் கருத்துகளால் வெகுண்டெழுந்து, வானவில்லின் மின்னஞ்சல் முகவரிக்கு அவசரமாக ஏதோ எழுதி அனுப்புவர்களும் இருக்கிறார்கள். திட்டித்தீர்க்கின்ற அல்லது துரோகப்புராணம் பாடுகின்ற இவ்வாறான மின்னஞ்சல்களில் பெரும்பாலானவற்றில் எழுதுபவர்கள் என்ன சொல்ல விழைகிறார்கள் என்பதே எமக்குப் புரிவதில்லை.

இலங்கையில் தற்போதுள்ள நிலைமைகளுக்கும் வானவில்லில் வெளியாகும் விடயங்களுக்கும் ஒரு இடைவெளி இருப்பதாக இலங்கையில் உள்ளவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த இடைவெளிக்கு வானவில் மாதத்திற்கு ஒரு தடவை வெளிவருவதும் காரணமாக இருக்கலாம். தினமும் பதிவேற்றப்படும் இணையத்தளங்கள், தினசரிப் பத்திரிகைகள், வானொலிகள், ரெலிவிஷன்கள், வாரப்பத்திரிகைகள் என ஊடகங்கள் பெருகிக்கிடக்கையில், மாதப்பத்திரிகைக்கும் அன்றாட நிகழ்வுகளுக்கும் இடைவெளி இருப்பது தவிர்க்க முடியாததே. ஒரு மாதத்தில் இலங்கையை மையமாக்கொண்டு நிகழும் ஒரு சில முக்கிய நிகழ்வுகளை ஆழமாக அலசி பதிந்தும், அத்தோடு சமூக மாற்றத்தினை உந்துவதற்கான கட்டுரைகளையும் மற்றும் தகவல்களையும் குறுஞ்செய்திகளையும் இணைத்து வெளியிடுவதே வானவில்லின் நோக்கமாக உள்ளது.

2009 ஆண்டில் முள்ளிவாய்க்காலில் புலிகள் தோற்கடிக்கப்பட முன்னர், 30 வருட காலப்பகுதியில் இலங்கையில் பிறந்த தமிழ் சந்ததியினர், இலங்கை அரச படைகளின் ஒடுக்குமுறைகள் மாத்திரமே தெரிந்தவர்களாக இருந்தனர். இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாறு, ஆயுதந்தாங்கிய தமிழ் தேசிய விடுதலை இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்னிருந்த காலங்கள் போன்றன இவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. ஆனால் இப்பொழுதுள்ள யுத்தத்தின் பின்னரான அமைதியான சூழலில் இந்த அர்த்தமற்ற யுத்தத்தால் சமூக. பொருளாதார அபிவிருத்தியில் எவ்வளவு பின்தங்கிப் போயிருக்கிறோம் என்பதை இந்த சந்ததியின் ஒரு பகுதியினர் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வாறு சிந்திக்கும் அனைவர் மத்தியிலும் வானவில்லின் கருத்துக்களை கொண்டு செல்ல வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்.

இன்றுள்ள நிலைமையில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு வானவில் பத்திரிகை வாயிலாக நாங்கள் நிறையவே சொல்லவேண்டியுள்ளது. புலிகளின் ஜனநாயக விரோதப்பண்புகளால் முன்னொருபோதும் இல்லாதவாறு தமிழ், முஸ்லீம் மக்கள் பிளவுபட்டுப் போயுள்ளனர். இந்த பிளவினை சரிப்படுத்துவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது முஸ்லீம் காங்கிரசோ இதுவரையில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நடந்து முடிந்த பாராளுமன்ற, மாகாணசபை தேர்தல்களில் தமிழ், முஸ்லீம் மக்கள் இந்த இரு கட்சிகளையும் கணிசமான அளவில் ஆதரித்து இருக்கிறார்கள். ஆனால் தமிழ், முஸ்லீம் மக்கள் இடையே ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்த இந்த இரு கட்சிகளும் தயங்குகின்றன.

மற்றவர்களுடைய கருத்துக்களையும் உன்னிப்பாகக் கேட்டு, எங்களுடைய கருத்துக்களையும் முன்வைத்து, விவாதித்தது, செழுமைப்படுத்துவதின் ஊடகவே சரியான கருத்துக்களை உருவாக்கமுடியும். சரியான கருத்துக்கள்தான் சமூகத்தை சரியான திசையில் வழிநடத்தும். வானவில் பத்திரிகை வெளிவரத்தொடங்கி 2 வருடங்களானாலும், எவ்வாறு தொடர்ச்சியாக வெளிக்கொணரப் போகின்றோம் என்ற மிகப்பெரிய சவால் இன்னமும் எம்முன்னாலுள்ளது. இந்த சவாலினை நாங்கள் வானவில்லின் வாசகர்களாகிய உங்கள் முன்னும் வைக்கின்றோம். *

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். sunvaanavil@gmail.com

# அப்பாவி றிசானாக்களை மரணக் குழிக்குள் தள்ளும் இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை!

**ச**வூதி அரேபியாவுக்குப் பணிப் பெண்ணாகச் சென்ற றிசானா நெளபீக் என்ற மூதூரைச் சேர்ந்த ஏழை இஸ்லாமியச் சிறுமியை, அந்த நாட்டின் 'சட்டத்தின் காவலர்கள்' கழுத்தை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றிய, நாகரீக உலகை வெட்கித் தலை குனிய வைத்த, இரத்தத்தை உறைய வைத்த அந்தச் சம்பவம், இலங்கையிலும் உலகிலும் வாழும் மனித நேயமுள்ள கோடிக்கணக்கான நெஞ்சங்களைக் குமுற வைத்த வண்ணம் உள்ளது.

இத்தனைக்கும் அந்த ஏழைச் சிறுமி செய்த குற்றம்தான் என்ன? தனது பராமரிப்பில் இருந்த சவூதிக் குழந்தை ஒன்றுக்குப் பால் பருக்கும்போது, அந்தக் குழந்தை எதிர்பாராத விதமாக மூச்சுத் திணறி இறந்துவிட்டது. இது றிசானாவின் சக்தியை மீறி நடந்த ஒரு தற்செயலான சம்பவம். அந்தச் சம்பவத்தை றிசானா திட்டமிட்டே செய்ததுபோல, அந்த ஏழைச் சிறுமி கைதுசெய்யப்பட்டு, விசாரணை என்ற பெயரில் அவள் பல ஆண்டுகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டு அணுஅணுவாகச் சாகடித்து, இறுதியில் அவளது தலை வெட்டப்பட்டு நிரந்தரமாக அவளது உயிர் பிரிக்கப்பட்டிருக்கிறது.



அந்தச் சிறுமியை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யும்படி இலங்கையின் அரசாங்கம், அனைத்துக் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள், இஸ்லாமிய நிறுவனங்கள், பொதுநல ஸ்தாபனங்கள் என்பனவும், உலகம் முழுவதும் உள்ள மனித நேய அமைப்புகளும் வேண்டுகோளுக்கு மேலாக வேண்டுகோள் விடுத்தும், சவூதி அரசாங்கமோ அல்லது சவூதி சட்டப்படி றிசானாவுக்கு மன்னிப்பு வழங்கக்கூடிய இறந்த குழந்தையின் பெற்றோரோ, எவ்விதமான கருணையும் காட்டவில்லை. (இந்த விடயத்தில் சவூதி நாட்டுடன் 'கொடுக்கல் வாங்கல்' செய்யும் உலகின் சகதி வாய்ந்த நாடுகளும், முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றி இனச் சுத்திகரிப்புச் செய்த புலிகளின் இன்றைய தமிழ் வாரிசுகளும், எவ்வித கண்டன அறிக்கைகளையும் விடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது)

மிகவும் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த றிசானாவை, அவளது பதின்ம வயதில் அவளது பெற்றோர் மனதைக் கல்லாக்கிக் கொண்டு, அவளது வயதைச் சவூதியில் வேலை செய்யக்கூடிய வயது எல்லைக்கு கூட்டிக்காட்டி ஒரு ஏஜென்சி மூலம் சவூதிக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். பணம் சம்பாதிப்பதற்காக ஏழை மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டி மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் மோசடியான முகவர்கள் இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக இலங்கையில் செயற்பட்டு வருவது இரகசியமான விடயமல்ல. அவர்களுக்கு காலங்காலமாக அரச உயர்மட்டத்திலுள்ள சிலரின் அனுசரணை இருப்பதும் இரகசியமான விடயமல்ல.

றிசானாவின் சம்பவம்தான் இது மாதிரியான முதல் சம்பவமும் அல்ல. இப்பொழுது இந்த மாதிரியான தலை வெட்டி மரண தண்டனை வழங்கிய சம்பவம் வெளி உலகுக்குத் தெரிய வந்ததாலும், அவளது விடுதலை பற்றிய முயற்சிகள் குறித்த செய்திகள் பல ஆண்டுகளாக ஊடகங்களில் வெளி வந்ததாலும், அது எல்லோரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தற்பொழுது சுமார் 5 இலட்சம் இலங்கையர்கள் மத்திய கிழக்கில் பல்வேறு வகைப் பணியாளர்களாகப் பணி புரிவதாகத் தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் கணிசமான ஒரு தொகையினர் வீட்டுப் பணிப் பெண்கள். இலங்கையின் ஏழ்மையான கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள் இந்த இளம் பெண்கள். இவர்கள் அங்கு அனுபவித்து வரும் கொடுமைகள் விவரிக்க முடியாதவை.

கடந்த காலங்களில் இவர்களில் சிலர் எஜமானர்களால் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றனர். அடித்துத் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர். வீடுகளில் இருட்டு அறைகளில் அடைத்து சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர். பட்டினி போடப்பட்டிருக்கின்றனர். போலியான குற்றச்சாட்டுகளால் பொலிசில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். சிலர் கொடுமைகள் தாங்காமல் தற்கொலை செய்திருக்கின்றனர். மன நோயாளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றனர். சம்பளம் வழங்காமல் உடுத்த துணியுடன் விரட்டப்பட்டிருக்கின்றனர். இப்படிப்பலப்பல.

இந்த விடயங்கள் எல்லாம் இலங்கை அரசோ அல்லது இன்று றிசானாவுக்காக அனுதாபம் தெரிவிக்கும் பல்வேறு அமைப்புகளோ அறியாதவை அல்ல. ஐந்து நட்சத்திர விடுதிகளில் இருந்துகொண்டு, பொழுதுபோக்காக மனித உரிமை குறித்தும், பெண் விடுதலை குறித்தும் அழகான

வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து வார்த்தையாடுபவர்களுக்கும், அறிக்கை சமர்ப்பிப்பவர்களுக்கும், இந்த ஏழைப் பணிப்பெண்களின் வாய்விட்டுச் சொல்ல முடியாத அவலங்களைவிட, இலங்கைக்கு அவர்கள் ஈட்டிக் கொடுக்கும் கோடிக்கணக்கான ரூபா அந்நியச் செலவாணியே முக்கியமான விடயம்.

இந்த நிலையை இலங்கையர்களுக்கு உருவாக்கிய 'பெருமை' ஐக்கிய தேசியக் கட்சியையே சேரும்.

1977இல் பதவியேற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட போரினால் மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் ஒருபுறம். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்றபடியால், அன்று ஐ.தே.க விதைத்த வினையை அதன் பின்னால் பதவியேற்ற அரசாங்கங்கள் எல்லாம் இன்று அறுவடை செய்ய வேண்டி இருக்கிறது. ஆனால் இந்த மத்திய கிழக்கில் பணிபுரியும் இலட்சக்கணக்கான பணியாளர்களோ போரினால் அங்கு சென்றவர்கள் அல்ல.

இவர்கள் 1977இல் ஐ.தே.க அரசு பதவியேற்றதும் உடனடியாக அமுல்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக அங்கு தொழில் தேடிச் சென்றவர்கள். இவர்களில் அநேகமானோர் ஐ.தே.க பதவிக்கு வருவதற்கு முன்னர் தமது சொந்தக் கிராமங்களில் விவசாயம் செய்தோ. மீன் பிடித்தோ, நெசவு செய்தோ அல்லது வேறு ஏதாவது வேலைகள் செய்தோ, வறுமையிலும் சிறுமைப்படாது கௌரவமாக வாழ்ந்த மக்கள்.

ஏகாதிபத்திய சார்பான ஐ.தே.க பதவிக்கு வந்ததும் கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கு கதவு திறந்துவிடப்பட்டது. அதன் காரணமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு வந்த உணவுப் பொருட்கள், ஆடை வகைகள், சிறு தொழில் கருவிகள் என எல்லாமே தாராளமாக இறக்குமதியாகின. அதன் விளைவாக உள்ளூர் உற்பத்திகள் படுத்தன. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த இலட்சக்கணக்கான மக்கள் தொழில் இழந்து வறுமையின் பிடியில் சிக்கினர். அவ்வாறு தொழில் இழந்த ஒரு பெரும் உழைப்பாளர் சக்தியை இலங்கை அரசு மத்திய கிழக்கு நாடுகளுக்கு மலிவான கூலிகளாக ஏற்றுமதி செய்து, பதிலாகத் தனது தேவைகளுக்கு ஏராளமான அந்நிய செலாவணித் தொகையைத் தேடிக் கொண்டது. மறுபக்கத்தில் இலங்கையின் வளமான நிலங்களையும், செழிப்பான வளங்களையும் அந்நியக் கம்பனிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது.

அன்றிலிருந்து இன்றுவரை சுமார் 35 ஆண்டுகளாக எமது நாட்டின் கௌரவமான ஆண்களும் பெண்களும் மத்திய கிழக்கு நாடுகளில் கொத்தடிமைகளாக ஊழியம் செய்து வருகின்றனர். அந்த நாட்டின் சொந்தக் குடி மக்களே அந்த நாடுகளில் நிலவும் மோசமான அடக்குமுறை அரசாட்சி முறைகளைப் பொறுக்காமல், அண்மைக்காலமாக கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கையில், இங்கிருந்து கூலிகளாகப் போனவர்களின் நிலை எப்படி இருக்கும்?

1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த இந்தத் திறந்த பொருளாதாரக் கொள்கை இன்றுவரை தொடர்கிறது. அதுமட்டுமின்றி அந்த அரசு 1978இல் நிறைவேற்றிய மக்கள் விரோத அரசியல் அமைப்பும் இன்றுவரை மாற்றங்கள் எதுவுமின்றித் தொடர்கிறது. இவை இரண்டையும், தொடர்ந்து வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கங்களும் மாற்ற முயற்சிக்கவில்லை.

தற்போதைய நாட்டுக்கு ஒவ்வாத அரசியல் அமைப்பையும், தேசவிரோத திறந்த பொருளாதாரக் கொள்கையையும் மாற்றி, மக்கள் ஒரு ஜனநாயகச் சூழலில் தமது வளமிக்க நாட்டில் தொழில் செய்து திருப்தியுடன் வாழக்கூடிய ஒரு சூழலை ஏற்படுத்தாதவரை, இந்த ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு வழி தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதைத் தடுக்க முடியாது. அப்படிச் செல்பவர்களில் சிலர் றிசானா போன்றவர்களின் நிலைக்கு ஆளாவதையும் நிறுத்த முடியாது.

நோய்க்கு வைத்தியம் செய்வதானால், முதலில் நோய் என்ன என்பதையும், அதன் அடிப்படையையும் அறிய வேண்டும். அது ஒரு தகுந்த வைத்தியனால்தான் முடியும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை, எம்மிடம் இவற்றில் எதுவுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.


இந்த நிலைமையை மாற்றுவதென்பது மக்கள் கைகளில் இல்லை. அது முழுக்க முழுக்க அரச கடிவாளத்தை வைத்திருப்பவர்களின் கைகளிலேயே உள்ளது. அரசு இதில் கவனம் செலுத்தாதவரை, இன்னும் பல றிசானாக்களை நாமே உருவாக்கும் நிலைதான் தொடரும்.

**– சின்னக்குட்டி (திரிகோணமலை)** *

## *கூடங்குளம் அணு மின் நிலையம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி கிருஸ்ணய்யர் கருத்து!*


*"அணுமின் எரிபொருள் கசிவால் ஏற்படும் கதிர்வீச்சு மாபெரும் பேராபத்தை, மனித குலத்துக்கு உருவாக்கும் என்பது பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள எந்த அணு உலையும் நூறு சதவிகிதம் பாதுகாப்பானது என்று யாராலும் உறுதியாகக் கூற முடியாது. ஆபத்தான தொழில்நுட்பம், அதிகமான உற்பத்திச் செலவு, கதிரியக்க ஆபத்து ஆகியவை காரணமாக அணுமின் உற்பத்தி மனித குலத்துக்குப் பேரழிவை உருவாக்கும்"*
*இவ்வாறு கூறியிருக்கிறார், தமிழ்நாட்டில் பாதுகாப்பற்ற கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி வி.கிருஸ்ணய்யர்.*

# கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு விசம் பருக்கிக் கொலை செய்த தமிழக சாதியக் கொடுமை!




*“**விருத்தாசலத்தில்** முருகேசன் என்ற தலித் பையன், கண்ணகி என்ற வன்னியர் பெண்ணைக் காதலிக்கிறார். வீட்டில் சம்மதிக்கமாட்டார்கள் என்பதால் ரகசியமாகப் பதிவுத் திருமணம் செய்து, அந்தப் பெண்ணைத் தன் உறவினர் வீட்டில் தங்க வைக்கிறார். பெண்ணைக் காணவில்லை என்றதும் தேடுகின்றனர். முருகேசன் மீது சந்தேகம் வந்து, அடித்துச் சித்திரவதை செய்கிறார்கள். அவர் வலியைப் பொறுத்துக்கொண்டு, ‘எனக்குத் தெரியாது’ என்கிறார். உடனே, நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தோண்டி வைத்திருந்த 300 அடி ஆழக் குழிக்குள் முருகேசனைக் கயிற்றில் கட்டித் தலைகீழாகத் தொங்க விடுகின்றனர். உயிர் பயத்தில் உண்மையைச் சொல்கிறார்.*

*உடனே, உறவினர்கள் சென்று கண்ணகியை அழைத்து வருகிறார்கள். அந்த இடைவெளியில் ஊரில் விறகுகள் அடுக்கி எரிப்பதற்கு மயானம் தயார் செய்யப்படுகிறது. பெண்ணை அழைத்து வந்தது முருகேசனின் சித்தப்பா. அவரை ஒரு மரத்தில் கட்டிவைத்துவிட்டு, மற்றவர்கள் சேர்ந்து முருகேசனுக்கும் கண்ணகிக்கும் வாயில் விசத்தை ஊற்றுகின்றனர். அவர்கள் குடிக்காமல் துப்பவே, காதில் விசத்தை ஊற்றி இருவரையும் கொல்கிறார்கள். கண்ணகியை மட்டும் வன்னியர் சுடுகாட்டில் எரித்துவிட்டு, முருகேசனை வேறு ஓர் இடத்தில் வைத்து எரிக்கிறார்கள். எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்த கூட்டம் கலைந்து செல்கிறது. எதுவுமே நடக்காததுபோல அடுத்த நாளில் இருந்து இயல்பு வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கிறார்கள்.*



**வழக்கறிஞர் பொ.ரத்தினம்**

*இது ஏதோ கற்காலத்தில் நடந்தது அல்ல. சில வருடங்களுக்கு முன்பு நம் தமிழ்நாட்டில் நடந்ததுதான். முருகேசனும் கண்ணகியும் செய்த தவறுதான் என்ன? காதலிப்பதும் கலியாணம் செய்து கொள்வதும் அவ்வளவு பெரிய குற்றமா? முருகேசன் என்ஜினியரிங் படித்தவர். கண்ணகி பி.காம் படித்தவர். ஒரு கிராமப்புறத்து தலித் பையன் இன்ஜினியரிங் வரை படிப்பது அத்தனை சாதாரண காரியம் அல்ல. கடைசியில் சாதி வெறி முருகேசனைக் காவு வாங்கிவிட்டது. படித்துவிட்டால் சாதி இழிவு நீங்கிவிடும் என்று சொல்வது எத்தனை அபத்தமானது”*

*என கோபம் கொப்பளிக்க ‘ஆனந்த விகடன்’ வார இதழுக்கு வழங்கிய செவ்வியொன்றில் கூறியிருக்கிறார் வழக்கறிஞர் ரத்தினம்.*

*தமிழ் நாட்டைச் சேர்ந்த 68 வயதான இந்த ரத்தினம் திருமணமே செய்து கொள்ளாமல், கடந்த 45 வருடங்களாக ஆதரவற்ற தமிழக மக்களுக்காக நீதிமன்றங்களிலும், வெளியிலும் போராடி வருகின்றார். மேல வளவு படுகொலை, அந்தியூர் விஜயா, மனித மலத்தை வாயில் திணித்த திண்ணியம்*

வன்கொடுமை இப்படிப் பல பிரச்சினைகளில் இவர் துணிவுடன் போராடியிருக்கிறார். தருமபுரி மாவட்டத்தில் நக்சலைட்டுகளை ஒழித்துக் கட்டுவதற்காக தமிழக அரசு நியமித்த பொலிஸ் அதிகாரி வோல்டர் தேவாரம் நிகழ்த்திய அராஜகங்களுக்கெதிராகவும் போராடியவர் வழக்கறிஞர் ரத்தினம். அவருக்கு சொந்த வீடு கிடையாது. நைந்த ஒரு சோடி செருப்பையும், ஒரு பழைய சூட்கேசையும் மட்டுமே உடமைகளாகக் கொண்ட ரத்தினம் தனது செவ்வியில் மேலும் பல விடயங்களைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டு தலித்துகள் மீதான மிக மோசமான அடக்குமுறைக்குச் சான்றாக இருக்கும் சம்பவம் மேலவளவு முருகேசன் படுகொலை. தலித்துகளுக்காக ஒதுக்கப்பட்ட மேலவளவு ஊராட்சியில் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டதும் வெற்றி பெற்றதும்தான் முருகேசன் செய்த ஒரே தவறு. விளைவு…முருகேசனும் இன்னும் ஐந்து தலித்துகளும் பட்டப்பகலில் பேரூந்தை வழி மறித்து வெட்டிக் கொல்லப்பட்டார்கள். வெட்டி எடுக்கப்பட்ட முருகேசனின் தலையை ஒரு கிலோ மீட்டர் தள்ளி வீசினார்கள். மொத்த இந்தியாவையும் அதிர வைத்த இந்தப் படுகொலையில் தலித் மக்களுக்காகக் களம் இறங்கி உச்ச நீதிமன்றம் வரையிலும் சட்டப் போராட்டம் நடத்தி 17 பேருக்கு ஆயுள் தண்டனையை உறுதி செய்தவர் ரத்தினம்.

தமிழ்நாட்டின் சாதிய அமைப்பு பற்றி ரத்தினம் பின்வருமாறு கூறுகிறார்:

"நம்நாட்டின் சாதிய அமைப்பு. ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு இருக்கிறது. எல்லா சாதிக்காரர்களும் தனக்கும் கீழே ஒரு சாதி இருப்பதை நினைத்துப் பெருமைப்படுகிறார்கள். ஆனால் ஒட்டுமொத்த சாதி ஒழிந்தால்தான் அந்த இழிவு போகுமே தவிர. தனக்கு மேலே இருக்கும் சாதி ஆதிக்கத்தை மட்டும் தனியே ஒழிக்க முடியாது. இப்போது உள்ள ஒடுக்கப்பட்டோர் கட்சிகள் எல்லாமே. தலித் மக்களை வைத்து அரசியல் செய்து பிழைக்கின்றன. உண்மையில் அந்தக் கட்சிகள் சாதிகள் இருப்பதை விரும்புகின்றன. சாதி ஒழிந்துவிட்டால். அவர்களால் பிழைக்க முடியாது.

தலித்துகளின் வாயில் மனித மலத்தைத் திணித்த திண்ணியம் வழக்கில் குறைந்தபட்சத் தண்டனையோடு குற்றவாளிகள் வெளியே வந்துவிட்டனர். அதற்கு எதிராக மேல்முறையீடு செய்ய தலித் அமைப்புகளே முட்டுக்கட்டை போட்டுவிட்டன. இத்தகைய பிழைப்புவாதக் கட்சிகளை அரசியல் அரங்கில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். இந்த அரசியல் கிரிமினல்களை ஒழித்துக்கட்டி, மக்களின்மீது உண்மையான கரிசனம் உள்ள புதிய அரசியல் இயக்கம் ஒன்றை உருவாக்க வேண்டும். அப்படி ஒரு தன்னலமற்ற அமைப்புக்காக மக்கள் காத்திருக்கிறார்கள்."

ரத்தினம் மறைமுகமாகக் குறிப்பிடும் தமிழகத்தின் தலித் அரசியல் கட்சிகளான தொல்.திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியோ, டாக்டர் கிருஸ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியோ, வன்னியர் சமூகத்தின் டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சியோ அல்லது தமிழர் தன்மானம் காப்பதாகச் சொல்லிக்கொள்ளும் தி.மு.க, அ.இ.அ.தி.மு.க, ம.தி.மு.க போன்ற திராவிடப் பிழைப்புவாதக் கட்சிகளோ, இலங்கைத் தமிழ் மக்களுக்காக வடிக்கும் போலிக் கண்ணீரில் ஒரு சொட்டைக்கூட, தமிழகத்தில் மோசமான ஒடுக்குமுறைக்குள்ளாகியிருக்கும் தலித் மக்களுக்காகச் சிந்தத் தயாராக இல்லை என்பதே உண்மையாகும்.

அங்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு முன்னணிதான், தலித் மக்கள் பாதிக்கப்படும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று போராடுகின்றது. இலங்கையிலும் 1960களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக ஐ.தே.க – தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் கூட்டரசாங்கத்தின் உதவியுடன் உயர்சாதி வெறியர்கள் சாதி வெறித் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்ட போது, தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் பல அமைப்புகள் இருந்தபோதும், புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் களத்தில் நின்று போராடிப் பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. *

---

**புரட்சிகர எழுச்சியுடன் என்றுமே விளையாட வேண்டாம். ஆனால். அதைத் துவங்கும்போது நீங்கள் கடைசிவரையில் செல்லவேண்டும் என்பதை உறுதியாக உணர்ந்திருக்க வேண்டும். — *மார்க்ஸ்***

# மாத்தளையில் மீட்கப்பட்டு வரும் ஐ.தே.க ஆட்சிக் காலத்து மனித எலும்புக் கூடுகள்!

இலங்கையின் மாத்தளைப் பிரதேசத்தில் தோண்டப்பட்டு வரும் மனிதப் படுகுழிகளிலிருந்து இதுவரை 200 பேரின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த எலும்புக் கூடுகளில் அநேகமானவை கால் கைகள் துண்டாடப்பட்ட நிலயிலும், உடலின் பல பாகங்களில் ஆணிகள் இறுக்கப்பட்ட நிலையிலும் மீட்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் 1988 – 89ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

1988 – 89 காலப்பகுதி ஜே.வி.பி இயக்கத்தின் இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி நடைபெற்ற காலமாகும். சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திர – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கூட்டரசாங்க காலத்தில், தோல்வியில் முடிந்த, சுமார் 6000 ஆயிரம் சிங்கள இளைஞர்களைப் பலி கொடுத்த ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கிய அந்த இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ரோகண விஜேவீராவே, இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சிக்கும் தலைமறைவாக இருந்து கொண்டு தலைமை தாங்கினார்.



இந்தக் காலகட்டத்தில் ஜே.வி.பி தனக்கு எதிரான பலரை – ஆயதப்படை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அரச ஊழியர்கள் – எனப் பலரைப் படுகொலை செய்தது. பதிலுக்கு அன்று பதவியில் இருந்த ஆர்.பிரேமதாச தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு பல்லாயிரக்கணக்கான ஜே.வி.பி உறுப்பினர்களையும், சிங்கள இளைஞர்களையும் படுகொலை செய்தது. இவ்வாறு கொலைகளை மேற்கொள்வதற்கு பிரேமதாச அரசு பொலிசாரையும், பாதுகாப்புப் படைகளையும் பயன்படுத்தியதுடன், தனிப்பட்ட முறையில் 'பச்சைப் புலிகள்' அமைப்பு உட்பட பல தனிப்பட்ட கொலைக் குழுக்களையும் உருவாக்கி வைத்திருந்தது.

இந்த நடவடிக்கைகளின் போது சுமார் 60,000 ஆயிரம் சிங்கள இளைஞர்களை பிரேமதாச அரசு படுகொலை செய்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தலைமறைவாக இருந்த ஜே.வி.பி தலைவர் விஜேவீரவைக் கைது செய்த ஆயுதப்படைகள், அப்போதைய அரசுத் தலைமையின் உத்தரவின் பேரில் அவரையும் சுட்டுக் கொன்றது. மறுபக்கத்தில் இதே காலகட்டத்தில்தான், இந்திய அமைதிப்படையுடன் போர் புரிந்து வந்த புலிகளுக்கு பிரேமதாச அரசு பல வழிகளிலும் உதவி புரிந்து, அவர்களுடன் 'தேன் நிலவு' கொண்டாடியம் வந்தது.

இதற்கு முன்னரும் குருநாகல், கொஸ்கெல, மாத்தறை, வலியகந்த போன்ற இடங்களில் மனிதப் படுகுழிகள் கண்டறியப்பட்டிருந்தன. முன்னதாக 1994இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு, எம்பிலப்பிட்டிய – சூரியகந்த என்ற இடத்தில் ஒரு குழியிலிருந்து சுமார் 200 வரையிலான எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன. பின்னர் அவை எம்பிலிப்பிட்டிய பகுதிலிலுள்ள ஒரு பிரபல பாடசாலையைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவர்களுடையது என்றும், அவர்கள் அனைவரும் ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் ஒருசில நாட்களில் காணாமல் போனவர்கள் எனவும் கண்டறியப்பட்டது.

டி.செல்வராஜ்

ஒரு குறுகிய காலகட்டத்தில் பிரேமதாச ஆட்சிக் காலத்தில் இத்தனை ஆயிரம் உயிர்களை அழித்தது பற்றியோ, அதற்குப் பொறுப்பானவர்கள் பற்றியோ, அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த எவருமே உரிய விசாரணை நடாத்தி, அதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கவில்லை. தற்பொழுது மாத்தளையில் கண்டெடுக்கப்படும் மனித எலும்புக் கூடுகள் குறித்து நாட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ள போதிலும், தற்போதைய அரசாங்கத்தின் 'மனித உரிமை மீறல்கள்' குறித்து இரவு பகலாக கண்ணீர் வடித்து வருபவர்கள் யாரும் அதுபற்றி அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

அதுமாத்திரமின்றி உண்மையான ஒரு பயங்கரவாத இயக்கமான புலிகளை அழித்த இறுதிப்போரில் இடையில்

சிக்கி மரணித்த பொதுமக்களின் இழப்புகள் பற்றி அடிக்கடி அறிக்கை விடுத்து வரும் உள்நாட்டு – வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகளோ அல்லது மேற்கு நாடுகளோ, இந்த பாரிய அளவிலான மனிதப் படுகொலைகள் குறித்து எவ்விதமான சிரத்தையும் காட்டுவதாகத் தெரியவில்லை. ஒருவேளை அவர்களுக்கு மிகவும் வேண்டிய ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் அவை நடைபெற்றதனால், அவர்கள் அசிரத்தையாக இருக்கிறார்களோ தெரியவில்லை.

பிரேமதாசவின் ஐ.தே.க அரசு மேற்கொண்ட இந்தப் படுகொலைகளின் போது, அவ்வரசில் ஒரு சிரேஸ்ட அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவே இன்றைய ஐ.தே.கவின் தலைவராக வீற்றிருக்கிறார் என்பதும், அந்தப் படுகொலைகளின் போது தமது ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைப் பறிகொடுத்த ஜே.வி.பி தற்பொழுது ஐ.தே.கவுடன் சேர்ந்து கூட்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது என்பதும், காலத்தின் கோலமாக இருக்கிறது.

# ரஸ்யாவில் 'ஸ்ராலின் பஸ்'கள்!

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரின் பிரதான நோக்கம் சோசலிச சோவியத் யூனியனைக் கைப்பற்றுவதாகவே இருந்தது. சோவியத் யூனியனைக் கைப்பற்றும் யுத்தத்தில் பிரதான போர்க்களமாகவும், யுத்தத்தின் போக்கை மாற்றுவதாகவும் அமைந்தது, சோவியத் யூனியனின் புகழ்மிக்க ஸ்ராலின் கிராட் - Stalingrad (தற்போதைய ரஸ்யாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இந்த நகரின் பெயரை வொல்கோகிராட் – Volgograd – என மாற்றியுள்ளனர்) நகருக்கு நடந்த யுத்தமாகும்.

இந்த நகரைக் ஹிட்லரின் படைகள் கைப்பற்றியிருந்தால், முழு சேவியத் யூனியனையும் பின்னர் ஹிட்லர் சுலபமாகக் கைப்பற்றியிருப்பான். அதைத் தொடர்ந்து அவன் உலகம் முழுவதையும் தனது ஆளுகைக்குள் கொண்டு வந்திருப்பான். ஆனால் ஸ்டாலினை தளகர்த்தராகக் கொண்டிருந்த சோவியத் செஞ்சேனை பல நாட்கள் வீரதீரத்துடன் போராடி, பல்லாயிரம் வீரர்களைப் பறிகொடுத்து, ஹிட்லரின் படைகளிடமிருந்து ஸ்ராலின் கிராட்டைப் பாதுகாத்ததுடன், ஹிட்லரின் படைகளைப் புறமுதுகிட்டு ஓடவும் வைத்தது. அதன் பின்னரே நாஜி ஜேர்மனி இரண்டாம் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்டது. இந்த வரலாற்றுப் புகழ்மிக்க 'ஸ்ராலின்கிராட்' யுத்தமே இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவையும் தீர்மானித்தது.

இந்த யுத்தம் நடந்து முடிந்த 70ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக, ரஸ்ய மற்றும் முன்னாள் சோவியத் சோசலிச ஒன்றியத்தில் அங்கம் வகித்த நாடுகளிலும், ஏனைய முன்னாள் கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒரு நிகழ்ச்சியாக ரஸ்யாவின் பல பகுதிகளிலும் 'ஸராலின் பஸ்' என்ற பெயர்களில் பஸ்கள் ஓட விடப்பட்டுள்ளன.

சோவியத் புரட்சியின் தந்தை லெனின் அவர்களின் மறைவுக்குப் பின்னர், சுமார் 30 ஆண்டுகள் காலம் (1924 – 1954) சோவியத் யூனியனை வழி நடாத்திய மாபெரும் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அவர்களின் தலைமைத்துவப் பங்களிப்பு இன்றி, ஹிட்லரைத் தோற்கடித்திருக்கவோ, ஒரு நவீன சோசலிச சோவியத் யூனியனையோ கட்டியெழுப்பி இருக்கவோ முடியாது என்பதை அனைவரும் அறிவர். எனவேதான் ஸ்ராலின்கிராட் யுத்தத்தின் 70ஆவது நிறைவை நினைவுகூரும்போது, ஸ்டாலினையும் சேர்த்து நினைவுகூருமுகமாக, அவரது உருவப் படங்கள் பொறித்த பஸ்களை ரஸ்ய நகரங்களில் ஓட விட்டுள்ளனர். 2013 பெப்ரவரி முதல் மே 09 வரை இவை செயற்படும்.



இந்த ஒழுங்குகளை தற்போதைய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் ஒழுங்கு செய்யவில்லை. முன்னாள் சுரண்டல் சக்திகளினதும், தற்போதைய முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினதும், பழமைவாத தேவாலயங்களினதும் எதிர்ப்பையும் மீறி, பொது மக்களின் பல்வேறு அமைப்புகள் மக்களிடமிருந்து திரட்டிய நிதியின் மூலமே இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளன. இந்த முயற்சிகளுக்கு ரஸ்யப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக உள்ள ரஸ்ய கம்யூனிஸ்ட் கட்சியும், பல்வேறு ரஸ்ய கம்யூனிஸ்ட் குழுக்களும் ஆதரவளித்துள்ளன.

**– புனிதன்**

நமது கட்சியின் தொண்டர்களில் பலர் சுயவிமர்சனத்தை விரும்புவதில்லை என்பதை நான் அறிவேன்.நமது கட்சியின் உணர்வுக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள் இவர்கள். சுயவிமர்சனம் என்ற கோசத்தைப் புதிய ஒன்றாக கருத முடியாது. கட்சியின் அடைப்படையாக அது உள்ளது. ஒரு கட்சியால் கம்யூனிஸ்டு கட்சியால் வழி நடத்தப்படும் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' நமது நாட்டில் உள்ளதால் நாம் முன்னேற விரும்பினால் நமது குறைகளை நாமே வெளிப்படுத்தி சரி செய்து கொள்ள வேண்டும். நமது வளர்ச்சியின் மிக முக்கிய உந்து சக்தியாக சுயவிமர்சனம் இருக்க வேண்டும்.

**- ஸ்டாலின்**

இலங்கையில் 2009 மே 18ஆம் திகதி புலிப் பயங்கரவாத, பிரிவினைவாத இயக்கம் அரச படைகளால் தோற்கடிக்கப்பட்ட நாள் முதல், பல்வேறு வெளிநாட்டு ஆதிக்க சக்திகள் இலங்கையின் தேசிய இனங்களுக்கு மத்தியில் ஒற்றுமை ஏற்படாதவாறும், இலங்கை பொருளாதார சுபீட்சத்தை அடையாதவாறும், பல்வேறு சதி, சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இத்தனைக்கும் இந்த நாடுகள், புலிகள் 30 வருட காலமாகப் போர் நடவடிக்கைகளிலும், இலங்கையில் மட்டுமின்றி உலகளாவிய பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்த காலத்தில், புலிகள் இயக்கத்தைத் தமது நாடுகளின் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து வைத்திருந்த நாடுகளாகும். ஆனால் இப்பொழுது இவர்கள் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த இலங்கைக்கு எதிரான அரசியலை, இன்னொரு வடிவத்தில் கையில் எடுத்துச் செயல்பட்டு வருவதைக் காண முடிகிறது.

இதிலிருந்து ஒரு விடயம் புலனாகின்றது. அதாவது இந்த நாடுகள் முன்னர் புலிகளைத் தடை செய்திருந்தமை போலியானது அல்லது அவர்கள் ‘இலங்கையில் புலிகள்



# இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கான முயற்சிகள் வெற்றி பெறுமா?

என்ன நாசவேலையை என்றாலும் செய்யட்டும், எமது நாடுகளில் செய்யாமல் இருப்பதற்கே இந்தத் தடை’ என எண்ணிச் செயற்பட்டிருக்க வேண்டும்.

போர் நடைபெற்ற காலத்தில் இந்த நாடுகள் புலிகளைத் தடை செய்திருந்த போதிலும்கூட, புலிகளுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பதே உண்மையாகும். அந்தக் காலத்திலும்கூட, புலிகள் இந்த நாடுகளில் இருந்தே பெருமளவிலான நிதிகளைத் திரட்டியும், ஆயுதங்களைச் சேகரித்தும் தமது போர்முனைக்கு அனுப்பி வந்திருக்கின்றனர் என்பது இரகசியமான விடயமல்ல.

புலிகள் இந்த நிதியினைத் திரட்டியதெல்லாம், இந்த நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களிடமே தவிர, இந்த நாடுகளின் அரச நிறுவனங்களிடமிருந்து அல்ல என சிலர் வாதங்களை முன் வைக்கலாம். அப்படிச் சொல்லி பாரிய விடயத்தை இந்த நாடுகள் மிக இலேசாகத் தட்டிக் கழித்துவிட முடியாது. ஏனெனில் புலிகளைத் தடை செய்த இந்த நாடுகள் சிலவற்றில், புலி முகவர்கள் நேரடியாகவே பொதுமக்களை மிரட்டிக்கூடப் பணம் சேகரித்துள்ளனர். 2004 டிசம்பரில் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைக் கண்காணிப்பகம் இது சம்பந்தமாக ஒரு கைநூலை பல ஆதாரங்களுடன் கனடாவில் வைத்து வெளியிட்டது. அதன் பின்னரே கனடிய அரசு புலிகள் இயக்கத்தையும், அதன் துணை அமைப்பான உலகத் தமிழர் இயக்கத்தையும் கனடாவில் தடை செய்தது.

## அ.தாமோதரம்பிள்ளை

அத்துடன் இந்த நாடுகளில் புலிகள் பல்வேறு முன்னணி அமைப்புகளைப் பல்வேறு பெயர்களில் நடாத்தி வந்ததுடன், நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டதை இந்த நாடுகள் நிச்சயம் அறியாமலிருக்க முடியாது. இந்த அமைப்புகள் புலிகளைத் தடை செய்த நாடுகளில் தமது இயக்கத்தின் முக்கிய தினங்களில் அல்லது இலங்கை அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களின் போது, பகிரங்கமாகவே புலிக் கொடிகளையும், பிரபாகரனின் உருவப் படங்களையும் ஏந்தி ஊர்வலங்கள் சென்றபோது, நம்ம ஊர் தெருச் சண்டியர்கள் சண்டித்தனத்தில் ஈடுபடும் போது பார்த்து ரசிக்கும் நமது நாட்டுப் பொலிசார் போல, இவர்களும் இந்தச் சட்ட விரோத நடவடிக்கைகள் சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்காது, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றனர்.

சரி இவைதான் போகட்டும். புலம்பெயர் தமிழர்களிடம் புலிகள் மிரட்டியோ மிரட்டாமலோ பணம்

சேகரித்திருக்கலாம். ஆனால் இந்த நாடுகளில் புலிகள் யாரிடமிருந்து ஆயுதங்களைச் சேகரித்தார்கள்? அதையும் புலம்பெயர் தமிழர்களிடமிருந்தா சேகரித்தார்கள்? இந்த 'ஜனநாயக' நாடுகளில் ஒருவரை இன்னொருவர் எந்த அடிப்படையிலேனும் பாகுபாடாக அல்லது அவதூறு செய்யும் வகையில் நடாத்தினாலே மகா குற்றம். அப்படியிருக்க இன்னொரு நாட்டில் யுத்தம் செய்யவும், அங்குள்ள அப்பாவி மக்களைக் கொலை செய்யவும், ஒரு பயங்கரவாத இயக்கம் எவ்வாறு இந்த நாடுகளின் அரசுகளுக்குத் தெரியாமல் ஆயுதங்களைச் சேகரிக்க முடிந்தது?

இது ஒருபுறமிருக்க, இலங்கையில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் மிக நீண்ட நெடுங்காலமாக சமாதான அனுசரணை முயற்சிகளில் ஈடுபட்டு வந்த நோர்வே நாடு, இன்றுவரை புலிகளைத் தனது நாட்டில் தடை செய்யவில்லை! அத்துடன் கடந்த காலங்களில் புலிகள் அந்த நாட்டில் கௌரவப் பிரஜைகளாக நடாத்தப்பட்டதுடன், பல அரச அதிகாரிகள் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டது சம்பந்தமான பலமான குற்றச்சாட்டுகளும் உண்டு. இன்றும்கூட புலம்பெயர் நாடுகளில் செயற்படும் புலிப் பிரிவுகளில் மிகவும் கடுமையான நிலைப்பாடு உள்ள குழுவினர் நோர்வேயைத் தளமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.

இத்தகைய ஒரு சர்வதேசச் சூழலில், புலிப் பயங்கரவாதிகளைத் தோற்கடித்த இலங்கை அரசை உலக அரங்கில் ஒரு முன்மாதியாக ஏற்றுக் கொள்வதற்கு மாறாக, இலங்கையில் நடைபெறும் சாதாரண உள்நாட்டு விவகாரங்களில்கூட, இந்த நாடுகள் மூக்கை நுழைத்துச் செயற்படுவது, இலங்கை மக்களுக்குப் பலத்த சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது. அதன் பிரதிபலிப்பை, போர் முடிவடைவதற்கு முன்னர் மட்டுமின்றி, போர் நடைபெற்று முடிந்த பின்னர் கூட, நடைபெற்ற எல்லாத் தேர்தல்களிலும் மக்கள் மிகவும் தெளிவாக வெளிக்காட்டி இருக்கின்றனர்.

இந்த உண்மையை, இலங்கை மக்களின் நிலைப்பாட்டை, இலங்கைக்கு எதிராகச் செயற்படும் இந்த நாடுகள் புரிந்து கொள்வது அவசியம். இந்த நாடுகள் இலங்கையைவிட, மனித உரிமைகளை மோசமாகத் திட்டமிட்டு மீறி வரும் எத்தனையோ நாடுகள் இருக்க, இலங்கையை மட்டும் குறி வைப்பதன் நோக்கம் என்ன என்பதை இலங்கை மக்கள் அறியாமல் இல்லை.

அதற்கான இரண்டு காரணங்களைச் சொல்லலாம். முதலாவது காரணம், இயற்கையால் உருவானது. அதாவது இலங்கை இந்து சமுத்திரத்தில், ஏன் உலகில் என்றுகூடச் சொல்லலாம், அமைந்திருக்கும் பூகோளரீதியான அதன் கேந்திர அமைவிடம். எனவே உலகை ஆதிக்கம் செய்ய விரும்பும் சக்திகளுக்கு, முதலில் இலங்கையை ஆதிக்கம் செய்யும் தேவை உள்ளது. (இலங்கையைச் சுமார் 250 ஆண்டுகள் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பிரித்தானிய முடியரசின் ஒரு கடற்படைத் தளபதி, இலங்கையின் திரிகோணமலை இயற்கைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றி ஒருமுறை குறிப்பிடும்போது, 'திரிகோணமலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்கள் ஆசியாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம்' எனக் கூறியதாகச் சொல்வதுண்டு)

இரண்டாவது காரணம், இலங்கைக்கு உள்ளே மக்களால் உருவாக்கப்பட்ட விடயம். அதாவது இலங்கையில் மக்களால் உருவாக்கப்பட்ட அந்நிய ஆதிக்கத்துக்கு எதிரான அரசாங்கங்கள் கடந்த சுமார் 18 வருடங்களாக ஆட்சியில் இருந்து வருவது. இது அந்நிய ஆதிக்க சகதிகளுக்குப் பெரும் தலைவலியாக இருந்து வருகிறது.

இந்த இரண்டு விடயங்களுமே இலங்கை மீதான அந்நிய சக்திகள் அக்கறை கொள்வதற்குக் காரணம்.

வரலாற்றை எடுத்து நோக்கினால், இலங்கையை ஒல்லாந்தர், போர்த்துக்கீசர், ஆங்கிலேயர் என மேற்கத்தைய ஏகாதிபதியவாதிகள் சுமார் 400 வருடங்கள் தமது நேரடிக் காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந்துள்ளனர். ஆனால் ஆசியாவில் 1930களிலும், 40களிலும் வெடித்துக் கிளம்பிய தேசிய விடுதலைப் போராட்டங்கள் – குறிப்பாக இந்திய சுதந்திரப் போராட்டம் காரணமாக – இலங்கை 1948 பெப்ருவரி 04ஆம் திகதி தனது தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்தது.

இருந்தாலும், இலங்கையின் முதலாவது சுதந்திர அரசாங்கத்தை படு பிற்போக்கானதும், ஏகாதிபத்தியத்துக்குச் சார்பானதுமான டி.எஸ்.சேனநாயக்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிடம் கையளித்ததின் மூலம், தமது மறைமுகமான காலனித்துவ ஆட்சியைப் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தொடர்ந்தனர். ஆனால் அந்த அரசாங்கம் ஏகாதிபத்திய சக்திகளின் ஆலோசனைப்படி மக்களுக்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, அவ்வரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த மக்கள் 1953 ஓகஸ்ட் 12ஆம் திகதி மாபெரும் ஹார்த்தால் போராட்டத்தில் குதித்து அந்த அரசைத் தூக்கி எறிந்தனர்.

அதன் விளைவாக 1956 பொதுத் தேர்தலில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. அவரது ஆட்சி தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை மிகக் குறுகிய காலத்தில் மேற்கொண்டது. இதனால் அச்சமடைந்த பிற்போக்கு சக்திகள் 1957இல் அவரைக் கொலை செய்தனர்.

ஆனாலும் பிற்போக்கு சகதிகளின் நோக்கம் நிறைவேறவில்லை. 1960இல் நடந்த பொதுத் தேர்தலில், பண்டாரநாயக்காவின் விதவை மனைவியான திருமதி சிறீமாவோ

பண்டாரநாயக்கவை மக்கள் ஆட்சிபீடம் ஏற்றினர். அவரது அரசு தனது கணவர் விட்டுச் சென்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னரிலும் பார்க்க வேகமாகத் தொடர்ந்தது. அதனால் மீண்டும் அச்சமடைந்த பிற்போக்கு சகதிகள், அவரது அரசு ஐ.தே.கவுக்குச் சார்பான 'லேக்ஹவுஸ்' ஏகபோகப் பத்திரிகை நிறுவனத்தைத் தேசியமயமாக்கும் பொருட்டுக் கொண்டு வந்த மசோதாவைத் தோற்கடிப்பதற்காக அவரது ஆளும் கட்சியிலிருந்து சிலரை விலைக்கு வாங்கி எதிராக வாக்களிக்க வைத்ததின் மூலம், அந்த அரசைக் கவிழ்த்தனர்.


S.W.R.D பண்டாரநாயக்க

அதைத் தெடர்ந்து, 1965இல் நடந்த பொதுத் தேர்தலில், சிறீமாவோவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைவிடக் குறைவான ஆசனங்களை ஐ.தே.க பெற்றிருந்த போதும், சில தீவிர சிங்கள இனவாதக் கட்சிகளையும், தமிழரசு – தமிழ் காங்கிரஸ் போன்ற தமிழ் இனவாதக் கட்சிகளையும் உள்ளடக்கிய 7 கட்சிக் கூட்டரசாங்கம் ஒன்றை ஐ.தே.க நிறுவியது. ஆனால் அது மேற்கொண்ட மக்கள் விரோத நடவடிக்கை காரணமாக, மீண்டும் 1970 பொதுத் தேர்தலில் மக்கள் முதல் தடவையாக இடதுசாரிகளையும் உள்ளடக்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர்.

இந்த அரசாங்கம் மேலும் பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதனால் கிலிகொண்ட ஏகாதிபத்திய சக்திகளும், அவர்களது உள்நாட்டு அடிவருடிகளும், அரசாங்கத்தை ஸ்தம்பிக்க வைக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அரசாங்கத்துக்கு வழங்கி வந்த பல்வேறு சர்வதேசக் கடன்களையும், உதவிகளையும் இரத்துச் செய்தனர் அல்லது குறைத்தனர். அத்துடன் அந்தக் காலகட்டத்தில் உருவான சர்வதேச உணவு நெருக்கடி, எண்ணெய் நெருக்கடி என்பன அரசை வெகுவாகப் பாதித்தது. அத்துடன் சர்வதேசப் பின்னணியுடன் பிற்போக்கு தமிழ் அரசியல் சக்திகள் தனிநாட்டுக்கான பிரிவினைவாதப் போராட்டங்களையும் ஆரம்பித்தனர்.

அரசாங்கம் இவையெல்லாவற்றுக்கும் தீர்வுகாண பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டது. குறிப்பாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண பிரதமர் சிறீமாவோவும், இடதுசாரிகளும் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டனர். ஆனால் மக்கள் தற்காலிகக் கஸ்டங்களைப் பொறுத்துக் கொள்ளும் நிலையில் இல்லை. அதைப் பயன்படுத்திய அரசாங்கத்தில் இருந்த வலதுசாரிகள், அரசாங்கத்தின் சுயசார்புக் கொள்கையைக் கைவிட நிர்ப்பந்தித்தனர். அதன் காரணமாக இடதுசாரிக் கட்சிகளுக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு, இடதுசாரிகள் அரசைவிட்டு வெளியேறும் பெரும் தந்திரோபாயத் தவறை இழைத்தனர்.

அதைத் தொடர்ந்து 1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் இரு வேறு அணிகாளாகப் போட்டியிட்டனர். இந்தப் பாரிய தவறு, ஐ.தே.க ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் மிகச் சுலபமாக வெற்றியீட்ட வழி வகுத்துவிட்டது.

முற்போக்கு சக்திகள் விட்ட இந்தப் பாரிய தவறால் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க, 1977 முதல் 1994 வரையிலான17 வருட ஆட்சிக் காலத்தில் நாட்டை மீண்டும் ஏகாதிபத்தியத்தின் வேட்டைக் காடாக்கியதுடன், மக்கள் மீது எல்லா வழிகளிலும் அடக்குமுறையையும் ஏவிவிட்டது. இன்னொரு பக்கத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இருந்த இனப் பாகுபாட்டை அவர்களுக்கெதிரான போராக மாற்றியது. ஐ.தே.க அரசின் இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம், இன்று இலங்கையில் ஜனநாயகம், மனித உரிமை என்பன பற்றியும், தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாகவும், நீலிக்கண்ணீர் வடிக்கும் இந்த வெளிநாட்டு சக்திகள் பூரண ஆதரவு அளித்து வந்தவை என்பதை, வரலாற்றிலிருந்து எவரும் மறைத்துவிட முடியாது.

ஐ.தே.கவின் 17 வருட கொடுங்கோல் ஆட்சி காரணமாக ஆத்திரமும் வெறுப்பும் அடைந்த மக்கள், 1994இல் முன்னாள் ஆட்சித் தலைவர்களான பண்டாரநாயக்கவினதும், அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்கவினதும் புதல்வியான சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதியாக்கியதுடன், அவர் தலைமையில் இடதுசாரிகளையும் உள்ளடக்கிய அரசாங்கத்தையும் தெரிவு செய்தனர். அதன் மூலம் உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளினதும், அவர்களது வெளிநாட்டு எஜமானர்களினதும் திட்டங்களுக்கு மீண்டும் ஒரு பெரும் அடி கொடுக்கப்பட்டது.

அதன் பின்னரே, இந்த வெளிநாட்டு சக்திகள் புலிப் பயங்கரவாத பிரிவினைவாத சக்திகளுக்கு மறைமுக ஆதரவு கொடுத்து, அவர்கள் இலங்கை அரசுக்குப் போட்டியாக இன்னொரு அரசை உருவாக்கி நடாத்துவதற்கு வழி வகுத்தனர். அவர்களது நோக்கம் முதலில், அதாவது ஐ.தே.கவின் 17 வருட ஆட்சிக் காலத்தில் ஒன்றுபட்ட இலங்கையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக இருந்தது. அதனால் அந்த நேரத்தில் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட யுத்த நடவடிக்கையை அவை ஆதரித்ததுடன், இலங்கை அரசின் இந்திய விரோத நடவடிக்கைகளையும் மறைமுகமாக ஊக்குவித்தனர்.

சந்திரிகாவின் அரசு வந்தவுடன், மறைமுகமாகப் புலிகளை ஆதரித்து தமிழர்களுக்கு ஆதரவானவர்களாகக் காட்டிக் கொண்டனர். அதுமாத்திரமில்லாமல், இலங்கையில் இனிமேல் தமக்குச் சாதகமான ஆட்சி வர வாய்ப்பில்லை என்பதைக் கண்ட அவர்கள், புலிகளின் தனிநாட்டுக்கான போராட்டத்தை ஆதரித்து 'தமிழீழ' தனி அரசொன்றை உருவாக்குவதையும் அவர்கள் விரும்பினர். அவ்வாறு உருவாகும் ஒரு தமிழ் அரசு மிகவும் பிற்போக்கானதாகவும், வலதுசாரித் தனமானதாகவும், இனவெறியுள்ளதாகவும் இருப்பதுடன், ஏறக்குறைய மத்திய கிழக்கில் இஸ்ரேல் எப்படி பாலஸ்தீனர்களுக்கு எதிராகவும், அரபுக்களுக்கு எதிராகவும் இருக்கிறதோ, அதேபோல 'தமிழீழ' அரசும், இந்தப் பிராந்தியத்தில் சீனாவைச் சுற்றி வளைக்கவும், இந்தியாவைச் சீர்குலைக்கவும் உதவும் என எண்ணினர்.

ஆனால் இலங்கை அரசு 2009 மே மாதம் புலிகளை அழித்ததோடு, இந்த வெளிநாட்டு சக்திகளின் நோக்கங்கள் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டன. இப்பொழுது இந்தச் சக்திகளுக்கு முன்னால் உள்ள கேள்வி என்னவெனில், இலங்கையில் உள்ள இன்றைய ஏகாதிபத்திய விரோத அரசை இல்லாதொழித்து, அந்த இடத்தில் எவ்வாறு தங்களுக்கச் சாதகமான அரசொன்றை உருவாக்குவது என்பதே.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதாலும், அங்கு ஜனாதிபதி, அரசாங்கம், மாகாணசபைகள், உள்ளூராட்சி சபைகள் என எல்லாமே முறைப்படியான தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுவதால், ஈராக்கில், லிபியாவில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் போன்றோ அல்லது தற்போது சிரியாவில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ஒத்த நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொண்டு , அங்கு ஒரு ஆட்சி மாற்றம் கொண்டு வருவதை இலங்கை மக்களோ, உலக நாடுகளோ ஏற்கப் போவதில்லை.

ஏற்கெனவே உள்ள ஏகாதிபத்திய சார்பான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் மூலம் இலங்கையில் ஆட்சி மாற்றம் கொண்டு வருவது சாத்தியமில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அக்கட்சி தொடர்ச்சியாக 30க்கும் அதிகமான தேர்தல்களில் தோற்றுள்ளது! அக்கட்சியில் வேறு மக்கள் செல்வாக்கு உள்ள தலைவர்கள் இல்லை என்பதுடன், 'வைக்கல் பட்டடை நாயான' ரணில் வேறு யாரும் அந்தக் கட்சியை வழி நடாத்த விடப் போவதுமில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா என்ற குதிரையை ஓடவிட்டும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. புலிகளுடனான யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு முன்னாள் இராணுத்தளபதி பொன்சேகா மிக முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தும், நாட்டின் அதியுயர் தலைவரைத் தெரிவு செய்வதில், இலங்கை மக்கள், குறிப்பாக சாதாரண சிங்கள மக்கள் அவரது அரசியல் பின்னணியையும் கருத்தில் (வெளிநாட்டு சார்பு) கொண்டதாலேயே, மக்கள் அவருக்கு ஆதரவளிக்கவில்லை.

இறுதி முயற்சியாக முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாக்கவின் பிரச்சினையை உள்நாட்டு – வெளிநாட்டுச் சக்திகள் தூக்கிப் பிடித்துப் பார்த்தார்கள். அது எதிர்கட்சியினரின் ஆதரவையும், கொழும்பில் வாழும் ஒருசில மேட்டுக்குடிவாசிகளின் ஆதரவையும் தவிர, நாட்டு மக்களின் கவனிப்பு எதனையும் பெறவில்லை.

இடதுசாரி வேசம் போட்டுக்கொண்டு, நடைமுறையில் இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஜே.வி.பியின் வீதி ஆர்ப்பாட்டங்களையும், தமிழ் தேசியத்தை வைத்துப் பிழைப்பு நடாத்தி வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், இந்த இலங்கைக்கு எதிரான சக்திகள் ஊக்குவித்தாலும்கூட, அதனாலும் இலங்கையில் தாம் விரும்பிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பது அவைக்குத் தெரியும்.

இந்த நிலைமையில், இவ்வருடம் மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரவுள்ளதாக அறிவித்துள்ளது. நொவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டைப் பகிஸ்கரிக்கப் போவதாகவும் சில நாடுகள் அறிவித்துள்ளன. உலகின் வேறெந்த நாட்டையும் விட, கூடுதலான பெரும் நாடுகளின் உயர்மட்ட இராஜதந்திரிகள் இலங்கைக்கு அண்மைக்காலங்களில் அடுத்தடுத்துப் படையெடுத்து வருகின்றனர். அவர்கள் தவறாது யாழ்ப்பாணமும் சென்று வருகின்றனர். எல்லோரது அங்கலாய்ப்பும் ஆட்சி மாற்றம் (Regime Change) தான்.

'நாம் ஒன்று நினைக்க, தெய்வம் வேறொன்று நினைத்து விடுகிறது' என்று சாதாரண மக்கள் தமக்குக் கையறு நிலை ஏற்படும் போது சொல்வதுண்டு. அதுபோல இலங்கையில் தமக்கு விரும்பியதைச் செய்ய விரும்புபவர்களும், 'நாம் ஒன்று நினைக்க வரலாறு வேறு விதமாக அல்லவா போய்விடுகிறது' என்று சொல்வதுதான் நிகழ்ந்து வருகிறது. இனிமேலும் நிகழப் போகிறது. ஏனெனில் இலங்கையைப் பொறுத்தவரை, மக்கள்தான் அங்குள்ள கடவுள்கள். அவர்கள்தான் எல்லாவற்றையும் காலத்துக்காலம் தீர்மானித்து வருகிறார்கள்.

மக்கள் தீர்மானிக்காதவரை, இலங்கையில் எத்தனை எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேர்ந்தாலும் சரி, அவற்றுக்கு எத்தனை பலமான உலக நாடுகள் ஆதரவளித்தாலும் சரி, ஆட்சி மாற்றம் நிகழப் போவதில்லை. மக்கள் இன்னமும் அங்கு ஒரு ஆட்சி மாற்றம் தேவை என்று தீர்மானிக்கவில்லை என்பதே அதற்குக் காரணம் இலங்கையில் ஆட்சி மாற்றம் வேண்டும் என

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க……

12ம் பக்கத்தொடர்ச்சி.....

முயற்சிகளில் ஈடுபடும் சக்திகள் ‘ஆடு நனைகிறது என்று அழும் ஓநாய்கள்’ என்பது அவர்களுக்குத் தெரியும் என்பதே அதற்கான அடிப்படையாகும்.

(அடுத்த இதழில் இலங்கை அரசாங்கம் இறுதிப்போர் வெற்றியின் பின்னர் செய்யத் தவறிய விடயங்களும், அதனால் எழுந்த பாதகமான நிலைமைகளும் பற்றி ஆராயப்படும்) *

# ஒரு வேதனைப் பொன்விழா!

இந்திய – சீனப் போர் நடந்து 50 வருடங்களாகின்றன. இதை நிச்சயம் பொன்விழாவாகக் கொண்டாட முடியாது.

ஆனால் 1962ல் நடந்த இந்த யுத்தம் இந்திய அரசியலில், இந்திய வெளியுறவில் மிகப்பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. ஒற்றைப் பெரும் கட்சியாக இரந்த இந்திய கம்யூனிஸ்ட் கடசி இந்த யுத்தம் பற்றிய உட்கட்சிக் கருத்து மோதலின் தொடர்ச்சியால், இரண்டாக உடைந்து மார்க்ஸிஸ்ட் கட்சி உதயமாயிற்று. தேர்தல் அரசியலில் நுழைந்த பின்னர் தனித் திராவிட நாடு கோரிக்கையை எப்படி, எப்போது கைவிடுவது என்று தவித்துக் கொண்டிருந்த தி.மு.கவுக்கும் அண்ணாவுக்கும் இந்த யுத்தம் நல்வாய்ப்பாக அமைந்தது. நேருவின் உலகளாவிய ராஜதந்திர பிம்பம் இந்த யுத்தத்தால் நொறுங்கியது.

உண்மையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்திருக்க வேண்டிய ஒரு பிரச்சினையை யுத்தமாக்கி இந்திய – சீன உறவில் நிரந்தர விரிசலை ஏற்படுத்திய ‘பெருமை’ இந்திய அரசியல்வாதிகளுக்கும் சீனத் தலைவர்களுக்கும் உரியது.

இன்று இந்த யுத்தம் பற்றிப் பேச இந்தியாவிலும் சரி சீனாவிலும் சரி அரசியல் தலைமைகள் விரும்பவில்லை. ஆனால் இதை நினைவுபடுத்தித் தொடர்ந்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே பகைமையை நீட்டிப்பதில் அமெரிக்காவுக்கு லாபம் இருக்கிறது. இந்தியா தன்னை முற்றிலும் அமெரிக்காவின் தோழனாகக் காட்டிக் கொண்டால், அது நிச்சயம் சீன – இந்திய உறவை கடுமையாகப் பாதிக்கும்.

சீனாவுடன் வர்த்தகத்தின் மூலம் தோழமையை வளர்த்துக் கொள்வதுதான் இந்தியாவுக்கு எதிர்காலத்தில் நல்லது. ஸ்ரீலங்கா, பாகிஸ்தான் தலைவலிகளைத் தணிக்க சீனாவுடன் நட்பை உருவாக்குவதுதான் இந்தியாவுக்குச் சரியான தீர்வு. தலாய்லாமாவுக்கு விருந்து வைத்தாலும்கூட, திபெத் விடயத்தில் இந்தியா, சீனாவின் நிலையையே ஆதரிக்கிறது. அருணாசலப் பிரதேசம் மட்டும்தான் சீனாவுடன் இருக்கும் ஒரே உறுத்தல். இதைப் பேசித் தீர்க்க முடியும். வணிக உறவுகளைப் பலப்படுத்தினால் இது சாத்தியம்.

இந்தியாவையும் சீனாவையும் பிரித்து வைத்துக் குளிர் காயும் தந்திரத்தைத் தொடர்ந்து அமெரிக்கா பயன்படுத்தும். மன்மோகன் போன்றோர் அதிகாரத்தில் இருக்கும் வரை இந்தச் சூழ்ச்சியிலிருந்து இந்தியா எளிதில் தப்பிக்கும் வாய்ப்பு இல்லை.

**– ஞாநி** (நன்றி: கல்கி) *

# மிகப்பெரிய விண்மீன் மண்டலம் கண்டுபிடிப்பு!

இதுவரை அறியப்பட்ட சுருள் விண்மீன் மண்டலத்துள் (Galaxy) NGC 6872 என்று அழைக்கப்படும் விண்மீன் மண்டலம் மிகப்பெரிது என வானியலாளர் கண்டுபிடித்துள்ளனர்.

பேரடை என்றும் குறிப்பிடப்படும் விண்மீன் மண்டலம் விண்மீன்களைக் கூட்டம் கூட்டமாக கொண்டுள்ள அண்டத்தின் ஒரு பகுதி ஆகும். ஒரு சராசரி பேரடையில் 10 மில்லியன் முதல் ஒரு டிரில்லியன் வரையான எண்ணிக்கையில் விண்மீன்கள் இருக்கும்.

இங்கேயே புதிய விண்மீன்களும் உருவாகின்றன. நூறு பில்லியனுக்கும் (1011) மேற்பட்ட பேரடைகள் உள்ளன என்று கணிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விண்மீன் மண்டலமும் சில ஆயிரம் முதல் பன்னூறாயிரம் ஒளியாண்டுகள் அளவு விட்டத்தை (நீளத்தை அல்லது அகலத்தை) உடையன.

எமது புவி அமைந்துள்ள சுருள் விண்மீன் மண்டலமான பால்வெளி (அல்லது பால்வழி) போல ஆனால் மிகப்பெரிய அளவை உடைய NGC 6872 விண்மீன் மண்டலம் ஏற்கனவே அறியப்பட்டிருந்தது. புதிதாகப் பிறந்த விண்மீன்கள் வெளிவிடும் புற ஊதா ஒளியை நோக்குவதற்காக கலக்சு (Galex - Galaxy Evolution Explorer) எனும் விண்வெளித் தொலைநோக்கி பயன்படுத்தப்படுகின்றது. அந்த தொலைநோக்கியில் NGC 6872 விண்மீன் மண்டலத்தை அவதானித்த வானியலாளர் எதிர்பாராதவிதமாக அதனது உண்மை அளவை அறிந்துள்ளனர். இது பால்வெளியைப் போல ஐந்து மடங்குகள் பெரிது என்பதை அறிந்தனர். இதன் ஒரு ஓரத்தில் இருந்து மறு ஓரத்தை அளவிட்டால் 522,000 ஒளியாண்டுகள் அளவு உடையதாக இருக்கின்றது. இதன் வடிவம் கணிதத்தில் தொகையீட்டின் குறி போன்றது.

IC 4970 எனப்படும் இன்னுமொரு சிறிய பேரடை NGC 6872 அருகே உள்ளது. இது NGC 6872 உடன் மோதுகைக்கு உட்பட்டது போலத் தென்படுகின்றது. *

சங்ககாலத் தமிழர், மலைப்பகுதியையும், காடுகள் அடர்ந்த பகுதியையும், வயல்கள் நிரம்பிய பகுதியையும், கடலோரப் பகுதியையும், வறட்சியான வரண்ட பகுதிகளையும், தனித்தனியாகப் பாகுபாடு செய்தனர். தொல்காப்பியம் காடு, நாடு, மலை, கடல் என நான்கு வகை நிலங்களைக் குறிப்பிடுகிறது. தமிழ் இலக்கணத்தில் இவை ஐந்து திணைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை நிலத்திணைகள் எனப்படுகின்றன.

1. மலையும் மலை சார்ந்த நிலமும் – குறிஞ்சி
2. காடும் காடுசார்ந்த நிலமும் – முல்லை
3. வயலும் வயல் சார்ந்த நிலமும் – மருதம்
4. கடலும் கடல் சார்ந்த நிலமும் – நெய்தல்
5. மணலும் மணல் சார்ந்த பகுதிகளும் – பாலை *

முன்பக்கத்தொடர்ச்சி.....

அப்போதைய நாடாளுமன்ற எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தவிர, ஏனைய அரசியல் கட்சிகள் யாவும் அதற்குக் கடுமையான எதிர்ப்புத் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன என்பதைப் பலர் இன்று மறந்துவிட்டனர். அதுமாத்திரமல்லாமல் தொழிற்சங்க அமைப்புகள், பொது ஸ்தாபனங்கள், பிரபலமான கல்விமான்கள் உட்பட சமூகத்தின் அனைத்துத்துறை சார்ந்தவர்களும்கூட அதை எதிர்த்திருந்தனர்.

இந்த அரசியல் அமைப்பைக் கொண்டு வந்த அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்., அதன் மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியைப் பெற்ற பின்னர் தனக்குள்ள அதிகாரங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த அரசியல் அமைப்பு ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர, ஏனைய அதிகாரங்கள் எல்லாவற்றையும் எனக்கு வழங்குகிறது" என மமதையுடன் கூறினார். அதை அவர் பின்னர் நடைமுறையிலும் செய்து காட்டினார்.

'பயங்கரவாதத்தை அழிக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு அவர் தமிழ் மக்களுக்கு எதிராக ஆரம்பித்த யுத்த நடவடிக்கைகள் அனைத்துக்கும், இந்த அரசியல் அமைப்பு தமக்கு வழங்கிய கட்டற்ற அதிகாரத்தையே பயன்படுத்தினார். அவரது ஆட்சிக் காலத்தில் அவர் கொண்டு வந்த அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற காட்டுமிராண்டித்தனமான சட்டங்கள் எல்லாம் இந்த அரசியல் அமைப்பு பெற்றெடுத்த குழந்தைகளே.

அதுமட்டுமல்லாமல், விகிதாசாரப் பிரதிநிதித்துவம், ஒரே கட்சியினரே ஆளுக்காள் அடிபடும் விருப்பு வாக்குமுறை போன்றவையும் இந்த அரசியல் அமைப்பு வழங்கிய கொடைகள்தாம். ஆரம்பத்தில் இந்த முறைகளை எதிர்த்த சில கட்சிகள்கூட, காலப்போக்கில் சிறுபான்மை இனங்களுக்கும், சிறிய கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு இந்த விகிதாசார முறை பயன் உள்ளது என்று கூறி, சத்தம் சந்தடியில்லாமல் அதை ஏற்றுக் கொண்டன. அதை ஆரம்பத்தில் எதிர்த்த சிறீலங்கா சுதந்திரக்கட்சியும்கூட, தனது கட்சியின் கைளுக்கு நிறைவேற்று அதிகாரம் வந்ததும், அதை மாற்றுவதற்குப் பதிலாக, அதைச் சுவைப்பதிலேயே நாட்டமாக நடந்து கொண்டது.

இந்த விகிதாசார முறையுடன், இன்னொரு தந்திரத்தையும் ஜே.ஆர். செய்து வைத்தார். அதாவது இந்த அரசியல் அமைப்பை மாற்றுவதானால், மூன்றிலிரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கீகாரம் வேண்டுமென சட்டம் இயற்றி வைத்தார். அவரது திட்டமாக இருந்தது என்னவெனில், விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ், நாடாளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் ஒருபோதும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பில்லையாகையால், இந்த அரசியல் அமைப்பு இலங்கை என்ற நாடு இருக்கும்வரை தனது பெயரைச் சொல்லிக்கொண்டு நடைமுறையில் இருக்கும் என்பதாகும். ஆனால் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம், மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதன் மூலம், ஜே.ஆரின் கனவைத் தவிடுபொடியாக்கியுள்ளது.

தற்போதைய அரசியலமைப்பு சுதந்திர இலங்கையின் மூன்றாவது அரசியலமைப்பாகும். முதலாவது அரசியலமைப்பு இலங்கைக்கு 1948 பெப்ருவரி 04ஆம் திகதி பிரிட்டிஸ்காரன் சுதந்திரம் வழங்கும்போது, சோல்பரி என்ற வெள்ளையனால் எழுதப்பட்டதாகும். அந்த அரசியல் அமைப்பின்படி, இலங்கை பிரித்தானிய முடியரசின் ஒரு அங்கமாகத் தொடர்ந்ததுடன், ஏகாதிபத்திய விசுவாச நாடாகவும் இருக்கும்படி உத்தரவாதப்படுத்தப்பட்டது.

சோல்பரியின் ஏகாதிபத்திய விசுவாச அரசியல் அமைப்பை மாற்றும்படி இடதுசாரிகள் தொடர்ச்சியாகப் போராடி வந்ததின் விளைவாக, அவர்களும் அங்கம் வகித்த 1970இல் பதவிக்கு வந்த சிறீலங்கா – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டரசாங்கம், 1972இல் புதிய குடியரசு அரசியல் யாப்பொன்றை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. அந்த அரசியல்

---

'ஒருவர் முதல் மாடிக்கு சென்றால் மூன்று ஜன்னல்களில் வெள்ளை திரை சீலைகள் தொங்கக் காணலாம். இந்த மூன்று ஜன்னல்களுக்குள் தான் ஸ்டாலின் வீடு.அந்த சிறிய ஹாலில் சட்டை மாட்டும் கொம்பில் ஒரு தொப்பிக்குப் பின்னால் நீளமான ராணுவ அங்கி தொங்கிக் கொண்டிருந்தது. இந்த ஹாலோடு இரண்டு படுக்கை அறைகளும் ஒரு சாப்பிடும் அறையும் இருந்தது.படுக்கை அறைகள் மிகவும் எளிய முறையில் அமைந்திருந்தன. மூத்த மகன் யாகூவ் இரவு நேரத்தில் சாப்பாட்டு அறையில் போடப்பட்டிருந்த படுக்கையாக மாற்றப்பட்ட சோபாவில் தூங்கினான். இளைய மகன் வாசிலி அறையின் ஒதுக்கு புறமாய் இருந்த ஒரு சிறிய இடத்தில் தூங்கினான். அவரது மாத வருவாய் ஐநூறு ரூபிள்கள். மிகவும் குறைவான இந்த ஊதியம் தான் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.'

***– ஸ்டாலின் வாழ்க்கை முறை பற்றி ஹென்றி பார்ஸ் என்ற பிரெஞ்சு எழுத்தாளர்***

அமைப்பு பிரித்தானிய முடியரசுடனான தொடர்புகளைத் துண்டிப்பது போன்ற முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்தாலும், மறுபக்கத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தத் தவறியது. இவ்வளவுக்கும் அந்த அரசியல் அமைப்பை வரைந்தவர் பெரும் சட்டமேதையும், தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கூறிவந்த லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், 1957இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் அரசாங்கம் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, “இரண்டு மொழி என்றால் ஒருநாடு, ஒரு மொழி என்றால் இரண்டு நாடு” என மிகத் தெளிவாகத் தீர்க்க தரிசனம் கூறியவருமான கலாநிதி கொல்வின் ஆர்.சில்வா ஆவார்.

குடியரசு அரசியலமைப்பைத் தூக்கி எறிந்து, 1978இல் கொண்டுவரப்பட்ட தற்போதைய அரசியலமைப்பு 1977 பொதுத்தேர்தலில் ஐ.தே.க ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமோக வெற்றியீட்டிய பின்னணியில் கொண்டு வரப்பட்டதாகும். இலங்கையின் படு பிற்போக்கானதும், ஏகாதிபத்தியத்தை வெளிப்படையாக ஆதரிப்பதுமான ஐ.தே.க கொண்டு வந்த ஒரு அரசியல் அமைப்பு எத்தகையதாக இருக்கும் என்பதைத் தனியாக இங்கு விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த அரசியல் அமைப்பு, அரச இயந்திரத்தின் பல்வேறு கூறுகளுக்கிடையில் முரண்பாடுகளைக் கொண்டுள்ளது என்பது வெளிவந்தமை ஒருபுறமிருக்க, இது முழுக்க முழுக்க மக்கள் விரோதமானது என்பதே பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே இந்த அரசியல் அமைப்பை முற்றிலுமாகத் தூக்கி எறிந்துவிட்டு, அதனிடத்தில் உண்மையான மக்கள் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும், சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமையையும், அதேநேரத்தில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும் ஏறபடுத்தும் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான தேவை மட்டுமின்றி, அதற்குத் தேவையான மூன்றிலிரண்டு நாடாளுமன்றப் பெரும்பான்மையும் இன்றைய அரசாங்கத்திடம் உள்ளது. எனவே கால தாமதமின்றி செயலில் இறங்க வேண்டியது அரசின் கடமையாகும். *

# சவூதியில் ஒரு ‘பெர்லின் சுவர்’!

பெர்லின் சுவர் என்றதும் பலருக்கு பனிப்போர் முடிவடைவதற்கு (1990) முன்னர் மேற்கு, கிழக்கு ஜேர்மனிகளுக்கு இடையில் கட்டப்பட்டிருந்த சுவரே ஞாபகத்துக்கு வரும். வேறு சிலருக்கு மன்னராட்சிக் காலத்தில் சீனாவில் கட்டப்பட்ட சீனப் பெரும் சுவரும் ஞாபகம் வரக்கூடும். இவைகள் நாடுகள் அல்லது வெவ்வேறு மன்னராட்சிகளின் எல்லைகளைப் பிரிப்பதற்காகக் கட்டப்பட்டவை.

ஆனால் இப்பொழுது மன்னராட்சி நடைபெறும் சவூதி அரேபியாவில் ஆண்களும் பெண்களும் தொழில் செய்யும் இடங்களில், ஒருவரை ஒருவர் பார்க்க முடியாதபடி சுவர்கள் எழுப்பப்பட இருக்கிறது. இதற்கான உத்தரவை சவூதி அரேபியாவின் தொழில் அமைச்சர் விடுத்திருக்கிறார்.

இந்த உத்தரவின்படி, சவூதியில் ஆண்களும் பெண்களும் பணி புரியும் வர்த்தக நிலையங்களில் இருபாலாரும் பணிபுரியும் பகுதிகள் வேறு வேறாக்கப்பட்டு ஒருவரை ஒருவர் பார்க்க முடியாதவாறு உயரமான சுவர்கள் எழுப்பப்பட இருக்கின்றன. இந்தச் சுவர்கள் 1.6 மீட்டர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். பெரும்பாலும் பெண்களின் உள்ளாடை விற்கும் துணிக்கடைகள், அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையங்கள் என்பனவற்றிலேயே இந்தத் திட்டம் முதலில் அமுலுக்கு வர உள்ளது.

வர்த்தக நிலையங்களில் பணி புரியும் ஊழியர்களிடையே கெட்ட நடைமுறைகள் ஏற்படாமல் இருக்கவும், நல்ல பண்புகளை வளர்க்கவுமே இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதாக சவூதி அரசாங்கம் இதற்கு விளக்கம் அளித்துள்ளது. 30 நாட்களுக்குள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாத வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2011 யூன் மாதம் அமுலுக்குக் கொண்டுவந்த ஒரு நடைமுறையின்படி, இந்த வர்த்தக நிலையங்களில் 44,000 சவூதி பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன. அதற்கு முதல் பெரும்பாலும் இந்த வேலை வாய்ப்புகளைப் பெற்றிருந்த ஆசிய நாட்டவர்களின் இடங்களுக்கே சவூதிப் பெண்கள் நியமிக்கப்பட்டனர்.

சவூதியின் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்ட ஒரு தகவலின்படி, வேலை இல்லாதோரின் தொகை 36 வீதமாக இருக்கின்றது. நாட்டின் மொத்த சனத்தொகையில் 7 வீதமான பெண்கள் மட்டுமே தனியார் நிறுவனங்களில் பணி புரிகின்றனர்.

**தகவல்: யூசுப் [சவூதி அரேபியா]**

# நாக்கூசாமல் பொய் பேசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்!

வடக்கு கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்த நிதியினை அரசாங்கம் திடீரென திருப்பி எடுத்துக் கொண்டதாக, ஒரு பிரச்சாரத்தைக் கூட்டமைப்பு 'போயபல்ஸ்கள்' அண்மையில் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள். வழமையான தொற்று வியாதிபோல, இந்த அண்டப் புளுகை புலம்பெயர் புலி சார்பு தமிழ் ஊடகங்களும் விழுங்கிவிட்டு, பின்னர் தமக்குரிய பாணியில் வாந்தி எடுத்துக் கொண்டன. உண்மையில் இதில் உள்ள உண்மை என்ன?

உள்ளூராட்சி சபைகள் தமக்கு ஒதுக்கப்பட்ட சில விடயங்களில் பொதுமக்களிடம் இருந்து சில வகை வரிகளை அறவிட்டு வந்தாலும், அவை அவற்றின் வளர்ச்சிப் பணிகள், செயற்பாடுகளுக்குப் போதுமானவை அல்ல. எனவே அவற்றின் சீரான செயற்பாடுகளுக்கென அரசாங்கம் வருடாவருடம் நிதி ஒதுக்கிக் கொடுப்பது வழமை. இந்த நிதி ஒதுக்கீடு இன, பிரதேச வேறுபாடு இன்றிச் செய்யப்படுவதாகும். குறிப்பிட்ட நிதியாண்டில் ஏதாவது ஒருசபை இந்த நிதியினைப் பயன்படுத்தாமல் அல்லது பயன்படுத்தியது போக மீதமான பணம் இருந்தால், அந்த நிதியை திறைசேரி மீள எடுத்துக் கொள்வது வழமை.

சில நிர்வாக ஒழுங்குகளுக்காகவும், அடுத்த வருடத் திட்டமிடுதலுக்காகவும் இந்த விதிமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பின்னர் புத்தாண்டில் புதிதாக எல்லாச் சபைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இது சாதாரண மக்களுக்குத் தெரியாவிடினும், அரசியலில், அதுவும் குறிப்பாக உள்ளூராட்சி அரசியலில் ஈடுபடும் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள சபைகளுக்கு ஒதுக்கிய நிதியை அரசாங்கம் திரும்ப எடுத்துக் கொண்டுவிட்டது என்றும், அதற்கான காரணம் தம்மை இனவாத ரீதியாக நடாத்தி, மக்களிடமிருந்து தனிமைப்படுத்தத்தான் என்றும் செய்யும் பொய்ப் பிரச்சாரத்தின் காரண காரியம் இதுதான். அதற்குக் காரணம் என்னவெனில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிர்வாகத்தின் கீழ் உள்ள சபைகள் தமக்கு ஒதுக்கிய பணத்தைச் சரியான முறையில் பயன்படுத்தாததுதான். முன்னைய காலங்களிலும் தமிழ்க் கட்சிகள் இவ்வாறு நடந்து கொண்டமைக்குப் பல உதாரணங்கள் உள்ளன.

இது தற்செயலாக நடைபெறும் விடயமல்ல. பிற்போக்குத் தமிழ் தலைமைகள் என்னதான் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசினாலும், அரசாங்கம் தமக்கு ஒதுக்கும் நிதியினைக்கூட சாதாரண மக்களின் அன்றாட அவசரப் பிரச்சினைகளுக்குச் செலவழிக்கமாட்டார்கள். அப்படிச் செய்துவிட்டு. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. இனப்பாகுபாடு காட்டுகிறது என்று பொய்ப்பிரச்சாரம் செய்து. அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றி வாக்கு வேட்டையாடுவது அவர்களது வழமை. ஆனால் தமக்குத் தேவையான எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து கொள்வார்கள். கொழும்பில் வீடு வாங்கி சொகுசாக வாழ்வார்கள். குடும்பத்தை இந்தியாவில் பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். பிள்ளைகளை வெளிநாட்டில் படிப்பிப்பார்கள். இப்படிப் பல.

ஆரம்ப காலத்தில் இருந்தே தமிழ் பகுதிகளில் இடதுசாரிகள் செல்வாக்குப் பெறுவதைத் தடுப்பதற்காக. ''தமிழனுக்குத் தேவை சோறல்ல, சுதந்திரம்'' என வீராவேசமாகக் கோசம் போட்டு, இறுதியில் தமிழனுக்குச் சோறும் இல்லாமல் சுதந்திரமும் இல்லாமல் செய்தவர்கள் இந்தத் தமிழ்த் தலைமைகள்தான். பொதுமக்களுக்காக இவர்கள் அரசாங்கத்திடம் எந்தவொரு கோரிக்கையையும் எப்பொழுதும் வைத்ததும் கிடையாது. (தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரேயொரு முறை சிறீமாவோவின் 1970 – 77 ஆட்சிக்காலத்தில் அவ்வரசில் (வலதுசாரி) அமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க மூலம் தெல்லிப்பளையில் ஒரு உப தபாற்கந்தோர் அமைத்ததாகக் கூறுவார்கள்!)

இப்படி எல்லாம் சுத்துமாத்து அரசியல் செய்துவிட்டு, அரசாங்கம் தந்த நிதியைத் திரும்பப் பறித்துக் கொண்டுவிட்டது என்று நாக்கூசாமல் பொய் சொல்வதற்கு, அவர்களுக்கு ஏன் தயக்கம் வர வேண்டும்?

– ***தியாகு***

**வானவில்லில் வெளியாகும் ஆக்கங்களை மறுபிரசுரம் செய்யும் ஊடகங்களுக்கு ஒரு வேண்டுகோள்**

மக்களுக்கு சரியான கருத்துக்களை கொண்டு செல்ல வேண்டும் என்பதே வானவில்லின் நோக்கம். எனவே வானவில்லில் வெளியாகும் ஆக்கங்கள் மறுபிரசுரம் செய்யப்படுவதின் வாயிலாக மேலும் மேலும் பல்வேறு தரப்பட்ட மக்களை சென்றடையுமென நாம் நம்புகின்றோம். எனினும் வானவில்லில் வெளியாகும் ஆக்கங்களை மறுபிரசுரம் செய்யும் சில ஊடகங்கள் (குறிப்பாக இணையத்தளங்கள்) அந்த ஆக்கங்களின் மூலம் வானவில் என்பதை குறிப்பிடாமல் விட்டுவிடுகின்றனர். இந்த செயலை நாம் ஆட்சேபிக்கிறோம். வானவில்லில் வெளியாகும் ஆக்கங்களை மறுபிரசுரம் செய்யும் ஊடகங்கள் அந்த ஆக்கங்களின் மூலம் வானவில் என்பதை குறிப்பிடுமாறு வேண்டுகின்றோம்.
**வானவில் ஆசிரியர் குழு**